செ.வெ.எண்:222 நாள்: 19.05.2017

ந.க.எண்.452/2017/அ5,
நாள்.17.05.2017.

மாவட்ட ஆட்சியரகம்,
காஞ்சிபுரம்.

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் அரசாணை எண்.78, நாள்.04.05.2017-ல், தமிழகம் முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள மனைகளை முறைப்படுத்திக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதி, நகராட்சி பகுதி, பேரூராட்சி பகுதி மற்றும் ஊராட்சி பகுதி ஆகியவற்றில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளின் பட்டியல், சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மூலம் தயார் செய்யப்பட்டு வருகிறது. இந்த அரிய வாய்ப்பினை பொது மக்கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்புத் துறை(DTCP) மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால்(CMDA), தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர், தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்ட மனைப்பிரிவின்படி, சாலைகள் மற்றும் பூங்கா பகுதிகளை உள்ளாட்சி வசம் ஒப்படைத்து, உள்ளாட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்படாத மனைப்பிரிவுகள் யாவும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளாக கருதப்படும்.

20.10.2016-க்கு முன்னர் அங்கீகாரம் பெறாமல் ஒரு மனையை பத்திரப்பதிவு செய்யப்பட்டு இருந்தாலும், அந்த மனைப்பிரிவும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக கருதப்படும்.

பொதுமக்கள், அங்கீகாரம் பெறாமல் பதிவு செய்துள்ள மனைகளை முறைப்படுத்தி கொண்டால் மட்டும் எதிர்காலத்தில் அம்மனையை விற்கவோ அல்லது அம்மனையில் அபிவிருத்தி மேற்கொள்ள இயலும். முறைப்படுத்தும் மனைப்பிரிவுகளில் மட்டும் உள்ளாட்சியால் அடிப்படை வசதிகளான சாலை வசதி, கழிவுநீர்வசதி, குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

எனவே, பொதுமக்கள் அங்கீகாரம் இல்லாமல், பதிவு செய்துள்ள மனைப்பிரிவுக்கான ஆவணங்களின் நகலினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி வசம் ஒப்படைத்து, தங்கள் மனைகளை முறைப்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

17/5/17